ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 243/23 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17
243/23 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண் : டபிளியு. 68 (70)/76.

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்**

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ், முதலமைச்சரின் விதப்புரையின்மீது சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கொபல்லவ,
சனாதிபதி.

சனாதிபதியின் அலுவலகம்,
கொழும்பு,
1976, திசெம்பர் 17.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் அவசரகால (கூட்டுறவு அதிகாரசபைகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், இவ்வொழுங்குவிதிகள் பயனுடையனவாதல் வேண்டும்.

3. கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அமைச்சரால் பெயர் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய இப்பரப்பு ஒவ்வொன்றுக்காகவும் கூட்டுறவு அதிகாரசபை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; அது இதனகத்திதன் மேல் " அதிகார சபை " எனக்குறிப்பீடு செய்யப்படும் என்பதோடு அமைச்சரால் நியமிக்கப்படும் ஐவருக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாக அமைதலும் வேண்டும். அத்தகைய உறுப்பினர்களுள் ஒருவர் அதிகாரசபையின் தலைவராக அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

4. அதிகாரசபையின் தத்துவங்களைப் பிரயோகித்தல் தொடர்பிலும், அதிகாரசபையின் கூட்டம் தொடர்பிலான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தல் தொடர்பிலும், கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் தொடர்பிலும், அத்தகைய கூட்டங்களில் கருமங்களை ஆற்றுதல் தொடர்பிலும் பொதுவான அல்லது சிறப்பான பணிப்புக்களை எழுத்தில் அதிகாரசபைக்கு அமைச்சர் விடுக்கலாம். அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றுக்கும் அதிகாரசபை பயன்கொடுத்தல் வேண்டும்.

5. அதிகாரசபை பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச்சங்கங்கள் சட்டத்தின் கீழ்ப் பதிவுசெய்யப்பட்டதும் அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்டதும், அதிகாரசபை எந்த இப்பரப்புக்காகத் தாபிக்கப் பட்டுள்ளதோ அந்த இப்பரப்பில் அமைந்துள்ளதுமான ஏதேனும் கூட்டுறவுச்சங்கத்தின் பணிப் பாளர் சபைக்கு, அத்தகைய கூட்டுறவுச்சங்கத்தின் ஏதேனும் தொழிற்பாடு, அத்தகைய சங்கத்தின் முகாமை, அல்லது அத்தகைய சங்கத்தின் நிதிகளைச் செலவிடுதல், அத்தகைய சங்கத்திற்கு ஊழியர்களைத் திரட்டுதல், நியமித்தல், அவர்களைப் பதவியுயர்த்துதல், இடமாற்றுதல், அவர்களது சேவைகளை முடிவுறுத்தல் என்பன தொடர்பில் புகட்டுரைகளை அல்லது பணிப்புக்களை விடுத்தல் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் சங்கத்தின் ஆதனம் அல்லது தொழில் தொடர்பிலான திரட்டுக்களை, கணக்குகளை அல்லது வேறு தகவல்களை, அதிகாரசபை தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வடிவத்தில் அதிகார சபைக்குக் கொடுத்துதவுமாறு அத்தகைய கூட்டுறவுச்சங்கத்தின் பணிப்பாளர் சபையைப் பணித்தல் ;

(இ) அத்தகைய ஏதேனும் சங்கத்தின் செயற்பாட்டின் கொண்டுநடாத்தலையும் முகாமையையும் கையேற்றல், அல்லது அத்தகைய செயற்பாட்டைக் கொண்டுநடாத்தவும் முகாமை செய்யவும் என மாற்று ஒழுங்குகளைச் செய்தல் ;

(ஈ) அகற்றுவதற்கான காரணம் எதுவும் கூறாமலே அத்தகைய ஏதேனும் கூட்டுறவுச்சங்கத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் எல்லோரையுமே அல்லது அவர்களுள் எவரையும் அகற்றிவிட்டு, பதவியிலிருந்து அகற்றப்பட்ட உறுப்பினரின் இடத்தில் வேறெவரேனும் ஆளை நியமித்தலும், அத்துடன், பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் எல்லோருமே அகற்றப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய சங்கத்தை முகாமை செய்வதற்கான தக்க மாற்று ஒழுங்குகளைச் செய்தலும் ; அத்துடன்

(உ) அத்தகைய ஏதேனும் சபையின் தொழிற்பாட்டுப் பரப்பை மீள எல்லை வரைந்து கூறல்.

6. (1) ஏதேனும் கூட்டுறவுச்சங்கத்துக்கு 5 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ஏதேனும் புகட்டுரை அல்லது பணிப்பு விடுக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய புகட்டுரைக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகி அதற்குப் பயன் கொடுத்தல் அத்தகைய கூட்டுறவுச்சங்கத்தின் பணிப்பாளர் சபையின் கடமையாதல் வேண்டும்.

(2) ஐந்தாம் ஒழுங்குவிதியின்கீழ் அதிகாரசபையினால் பதவியிலிருந்து அகற்றப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர் அத்தகைய அகற்றற்றேதியிலிருந்து அவரது பதவியை வறிதாக்கல் வேண்டும்.

(3) எழுத்திலான ஏதேனும் வேறு சட்டத்தில் எது எப்படியிருப்பினும், 5 ஆம் ஒழுங்குவிதியினால் அதற் குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதிகாரசபையினால் செய்யப்பட்ட, அல்லது அதிகாரசபையினால் விடுக்கப்பட்ட ஏதேனும் புகட்டுரைக்கு அல்லது பணிப்புக்கு இணங்கியொழுகும் அல்லது பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக ஏதேனும் கூட்டுறவுச்சங்கத்தின் பணிப்பாளர் சபையினால் செய்யப்பட்ட ஏதேனும் செயல் அல்லது அலுவல், செல்லுபடியும் பயனும் கொண்டதாதல் வேண்டுமென்பதோடு, நீதிமன்றம் எதிலும் அல்லது நியாயசபை எதிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலும் ஆகாது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது